2017 ஜூலை 18]

கொடுக்கின்ற வகையில் திருப்பூருக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 230 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள்; இடமும் கண்டறியப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதனை ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

பாதாள சாக்கடைத் திட்டம்

***374—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் அனைத்தும், டிசம்பர் 2017–க்குள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் பாதாள சாக்கடைத் திட்டம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2006 ஆம் ஆண்டு தளபதியார் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில், 6–6–2006 அன்று அமைச்சர் பொறுப்பேற்றவுடன் காஞ்சிபுரத்தில் முதல் கூட்டம் போடப்பட்டு,* JNNuRM scheme*–ல் வழங்கப்பட்டது. இந்தியாவிலேயே மக்கள் பங்களிப்போடு எடுக்கப்பட்ட முதல் நகராட்சிகளென்றால், அவை தாம்பரம், பல்லாவரம் மற்றும் ஆலந்தூர் ஆகியவையாகும். அன்றைக்கு நாங்கள் மக்களிடத்தில் நேரடியாகச் சென்று, அந்தப் பணத்தை வசூலித்து, மக்களும் அன்றைக்கு எங்களை நம்பி, அந்தத் தொகையை வங்கியில் டெபாசிட் செய்து, 2008 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது; தற்போது 10 ஆண்டுகள் முடியப்போகின்றன. ஆனால், இதுவரை அந்தப் பணி முடிவடையாத நிலையில் இருக்கின்றது. மேற்கு தாம்பரத்தில், 90 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துவிட்டன. இப்போது, அந்தப் பணி கொஞ்சம் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உடனடியாக அந்தப் பணியை இரண்டு மாதங்களில் முடித்து, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு விடவேண்டும்.*

மேலும், கிழக்கு தாம்பரத்தில், பணிகள் கொஞ்சம் தொய்வாக நடைபெற்று வருகிறது. அதற்கு முக்கிய காரணம், Metro Water *பணிகள்.* Metro Water *மூலம் பணிகளைச் செய்தால்தான், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் சிறப்பானதாக அமையும். இப்போது, அந்தப் பணி, நகராட்சியினுடைய அதிகாரிகள் மேற்பார்வையில், சாதாரண ஒப்பந்தக்காரர்களால் செய்யப்படுகின்றன. அந்தப் பணி காலதாமதமாவதற்கு இதுதான் முக்கிய காரணமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பணியை* Metro Water *நிருவாகத்தின்மூலம், ஓய்வு பெற்ற சிறப்பு அதிகாரிகளை நியமித்துச் செய்ய வேண்டும். டிசம்பருக்குள் முடிந்துவிடும் என்று சொல்லும் பணியை உடனடியாக 3 மாத காலத்திற்குள் முடித்து பொது மக்களுக்குக் கொடுத்தால்தான், பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் இருக்கும். மற்றொன்று,* Treatment Plant.

2017 ஜுலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. இராஜா, இன்னொரு கேள்வி கேட்கலாம், சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கேள்விதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. இராஜா, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Treatment Plant என்பது மிக மிக முக்கியம். அதன் ஒப்பந்தப் பணி சரியாக இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்து நெரிசல் மிக மிகக் கடுமையாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை உடனடியாக மேற்பார்வை செய்து, ஓய்வு பெற்ற அதிகாரிகளை நியமித்து, 3 மாத காலத்திற்குள்ளாக அப்பணியை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சிறப்பு நிலை நகராட்சியின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,74,787 ஆகும். நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 20.72 சதுர கி.மீ. ஆகும். இந்த நகராட்சியில், 40,000–க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசாணை எண் 80, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28–5–2009–ன்படி நிருவாக அனுமதி வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மைதான்; நிருவாக அனுமதியை 2009 ஆம் ஆண்டில் வழங்கினார்கள்.

தாம்பரம் கிழக்குப் பகுதியில் சிப்பம் 1–ல், கழிவுநீர்க் குழாய் பதித்தல், ஆள்நுழைவு வாயில், வீட்டிணைப்புக் கழிவுநீர் உந்து நிலையம், கழிவுநீர் பிரதான குழாய் பதித்தல், ஆக மொத்தம் சிப்பம்–1–க்கான பணியை East Coast Industries Limited என்ற

ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்காமல் காலம் தாழ்த்தியதன் காரணமாக பல்வேறு குறிப்பாணைகளும், எச்சரிக்கைகளும், அறிவிப்புகளும் அனுப்பப்பட்டு, 28–7–2012 அன்று ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. Chairman ஆக நீங்கள் இருந்ததால் உங்களுக்கு எல்லாம் தெரியும். எனவே, சிப்பம்–1–க்கான பணியை தாம்பரம் நகராட்சியின் மூலமாகவே மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு, 41,82,00,000 ரூபாய் மதிப்பீட்டில் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, VVV Constructions Pvt. Ltd., என்ற நிறுவனத்திற்கு 3–3–2015 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, சிப்பம்–1–ல் இதுவரை 73 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. டிசம்பர் 2017–க்குள் எஞ்சியுள்ள பணிகள் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தாம்பரம் மேற்கு பகுதியில், கழிவுநீர்க் குழாய் பதித்தல், ஆள் நுழைவுவாயில், வீட்டு இணைப்புக் கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர்ப் பிரதானக் குழாய்கள் பதித்தல் ஆகிய சிப்பம்–2–க்கான பணிகளில், 74.059 கி.மீ. நீளத்திற்குக் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 3,101 எண்ணிக்கையிலான ஆள் நுழைவுவாயில்களும், 9,339 வீட்டிணைப்புகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போதும் சொன்னீர்கள். சிப்பம்–3–ல் தாம்பரம் மேற்குப் பகுதியில், மண்ணூரான்குளம் பகுதியில் 29 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நவீன தொழில்நுட்பத்துடன் 30 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி 80 சதவிகிதம் முடிவடைந்துள்ளது. மேலும், இதற்கு தனியாரால் நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்டது. அந்தத் தடையாணையையும் அரசு நீக்கி, தற்போது அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. சிப்பம்–4–ல் தாம்பரம் கிழக்குப் பகுதியில், துணை கழிவு நீரேற்று நிலையத்திலிருந்து 7,750 மீட்டர் நீளத்திற்கு பிரதான உந்து குழாய்கள் அமைக்கும் பணி, 21 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 10–15

தாம்பரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தினுடைய அனைத்துப் பணிகளும் டிசம்பர் 2017–க்குள் முழுமையாக முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு

2017 ஜூலை 18]

உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அந்தப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், இந்தப் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்து பணிகளை வேகமாக முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சட்டமன்றத் தொகுதியினுடைய உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட கோரிக்கை என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பேருந்து நிலையத்தை மாற்றி வாகனங்களுக்கு* parking *வசதி செய்யும் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தை மிகவும் சிரமப்பட்டு காப்பாற்றி இருக்கின்றோம். பொது மக்களுக்கு பேருந்து நிலையம் 100 சதவிகிதம் முக்கியம்; வாகனங்களை நிறுத்துவதற்கும் மக்கள் இடம் கேட்கின்றார்கள். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பொது மக்கள் மற்றும் வியாபாரிகள் எது வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதை நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்றும், பொது மக்களிடம் நேரடியாகக் குறைகளைக் கேட்டு தெரிந்துகொண்டு, அதிலே, ஒரு சிறப்பு தனிக் கவனம் செலுத்தி, நீங்கள் செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இன்று வெளியாகியிருக்கிற தினமலர் பத்திரிகையிலே அதிகமான பகுதிகள் அங்கே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த இடம் பேருந்து நிலையமாக இருந்தால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி மூலக் கேள்விக்கு தொடர்பில்லாமல் இருந்தாலும்கூட, எனது துறை சம்பந்தப்பட்டதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து ஏற்கெனவே கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்து நிலையமாக இருப்பது அவசியம் என்று குறிப்பிட்டது குறித்து ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.

திரு. சோ. மாரியப்பன் கென்னடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் தேர்வுநிலைப் பேரூராட்சியில், வார்டு 16 மற்றும் 17 ஆகிய பகுதிகள் கிராமப்புற மின் இணைப்பாக இருந்து வந்ததால், மேற்படி மின் இணைப்பினை நகர்ப்புற மின் இணைப்பாக மாற்றுவதற்கு பொது மக்களிடமிருந்து எண்ணற்ற கோரிக்கைகள் வரப்பெற்றதைத் தொடர்ந்து, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு 46,89,070 ரூபாய் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனைக் கனிவுடன் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பாதாள சாக்கடைத் திட்டம் குறித்தது என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் மின் இணைப்பை மாற்றுவது சம்பந்தமாக கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஏதோ

2017 ஜூலை 18]

பிரச்சினைகள் இருப்பதால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். அதுகுறித்து துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் நகராட்சியில் ஒரு இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். ஏற்கெனவே டெங்கு மற்றும் மர்மக் காய்ச்சல் அபாயங்கள் எல்லாம் அங்கே இருந்து, உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த வருடம் பிரச்சினைகள் ஏதுமில்லாமல் இருக்கின்றன.*

கடையநல்லூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் தி.மு.க ஆட்சிக் காலத்தில் தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் இருக்கின்றது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பணிகளையெல்லாம் உரிய முறையில் விரைவுபடுத்த வேண்டுமென்று வேண்டுகோள் வைத்த பின்னர், அந்த ஆய்வுகள் நடைபெறுவதாகத் தெரிவித்தார்கள். எல்லா தெருக்களிலும் சாக்கடைக் கழிவுநீர் செல்வதனால் பொது மக்களுக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கின்றது. ஒரு இலட்சம் மக்கள்தொகை கொண்ட கடையநல்லூர் நகராட்சியில் விரைவாக பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைப்பதற்குண்டான பணிகளை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் என்பது ஒரு மிகப் பெரிய கடுமையான பணி என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கடந்த கால தி.மு.க ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் எவ்வளவு திட்டங்கள்*

அவர்களால் முடிக்கப்பட்டன, எவ்வளவு திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் முடிக்கப்பட்டன என்பதைக் குறித்து ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களில் பல திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில்கூட பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இதுகுறித்து கோரிக்கை வைத்திருக்கிறார். இதுகுறித்து தனிக் கவனம் செலுத்தப்பட்டு ஏற்கெனவே துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 10—20

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை நகரம் சிறு தொழிற்சாலைகள் நிறைந்த நெருக்கடியான ஒரு நகரமாகும். அது, மிக விரைவாக வளர்ந்து கொண்டிருக்கிற நகரமாகும். அப்படிப்பட்ட ஊருக்கு பாதாள சாக்கடைத் திட்டம் மிகவும் அவசியம் என்று நான் இதற்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எனது உரையின்மூலம் தெரிவித்திருக்கிறேன். இந்த ஆண்டு அருப்புக்கோட்டை நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தினை எடுக்க முடியுமா? அப்படி எடுக்க முடிந்தால், மத்திய அரசின் திட்டமான AMRUT திட்டத்தின்மூலம் எடுத்தால் மானியம் அதிகம் கிடைக்கும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு, இத்திட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியில் நிறைவேற்றப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2017 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் பேசும்போது AMRUT திட்டம் பற்றி பேசினார்கள். AMRUT, Smart City போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசின்மூலம் கூடுதல் நிதி கிடைக்கும் என்பதல்ல, அதில் 50:50 என்ற விகிதத்தில்தான் கிடைக்கும். சிலவற்றில் மாநில அரசின்மூலம் 67 சதவிகிதமும், மத்திய அரசின்மூலம் 33 சதவிகிதமும் நிதி போடப்படுகின்றது. அதிகமான நிதியை மாநில அரசுதான் கொடுக்கின்றது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் மத்திய, மாநில நிதியினைப் பயன்படுத்தி பல திட்டங்களை எடுத்துள்ளார்கள். இந்த வருடம் விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலூர் மாநகராட்சிக்கு ரூ.343 கோடியே 69 இலட்சம், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.442 கோடி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு ரூ.325 கோடி, திருநெல்வேலி மாநகராட்சிக்கு ரூ.326 கோடி என்று அறிவித்திருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து எனது அறிவிப்பிலும் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே சில மாநகராட்சிகளை முழுமையாக தேர்வுசெய்து இத்திட்டத்திற்காக எடுத்துவிட்டோம், அதுபோல், படிப்படியாக மற்றவையும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் சொன்ன கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள சாக்கடை நீரினை ஆங்காங்குள்ள ஏரிகளிலும், குளங்களிலும் விட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே, பாதாள சாக்கடைத் திட்டத்திற்குத் தேவையான அனைத்து DPR–ம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தினை இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இந்த ஆண்டா, அடுத்த ஆண்டா அல்லது அதற்கு அடுத்த ஆண்டா என்றார்கள்; அப்படியெல்லாம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொகுதியின் மீதுள்ள அக்கறையில் கேட்கிறார். நிதியாதாரம் விரிவு செய்யப்பட்டபின் கண்டிப்பாக, விரைவாக எடுத்துக்கொள்ளப்படும்.

பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது போக்குவரத்து இருக்கும் பகுதியில் பைப் லைன் அமைப்பது சிரமம். அதுபோல் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பது என்பதும் மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருக்கும். இவை அனைத்தும் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுமுன்தினம், அதாவது, 16–7–2017–ல் இட நெருக்கடி காரணமாக மதுராந்தகம் நகராட்சிக் கட்டடத்தை பொது இடத்தில் கட்ட வேண்டும் என்று சூனாம்பேடு சாலையில், மாம்பாக்கம் என்ற இடத்தில் காலை 6 மணி முதல் 7 மணி வரை பூஜை நடத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் நானும் கலந்துகொண்டேன். காலை 7 மணிக்கு மேல் அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் நகராட்சிக் கட்டடத்தினை அவ்விடத்தில் கட்டக்கூடாது, வேறு இடத்தில் கட்ட வேண்டும் என்று சொல்லியிருப்பதாகத் தகவல்

2017 ஜுலை 18]

வந்துள்ளது. அதே இடத்தில் நகராட்சிக் கட்டடம் கட்டப்படுமா? வேறு இடத்தில் கட்டப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சரிடத்தில் நேரில் சென்று கேட்டுக்கொள்ளுங்கள். திரு. சு. புகழேந்தி, உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

214—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***5509—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆனைமலையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனே பெரிதென எண்ணிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், அவர்கள் வழியில் ஆட்சி செய்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். வால்பாறை தொகுதி, கோட்டூரில்*